முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் துவக்கப்படுமா என்று தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 100 கிளை நிலையங்களை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த ஆணையிட்டிருக்கிறார்கள். வரும் நிதியாண்டில்தான் 100 கிளை நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே ஆணையைப் பெற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திலே, வரும் நிதியாண்டிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோடானுகோடி நன்றி மலர்களைப் பொற்பாதங்களில் சமர்ப்பித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

சர்க்கரை ஆலை

***35682—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 25]

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, செய்யாற்றின் நதிக்கரையில் சர்க்கரை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. அத்தொகுதியில் உள்ள 3 சர்க்கரை ஆலைகளும் விவகார எல்லை பகுதியாக உள்ளது. இருந்தாலும், புதிய சர்க்கரை ஆலை அமைக்க போதுமான கரும்பு பயிரிட பரப்பு அதிகமானால் மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆன்மிகம் நிறைந்த தீபம் மாவட்டமாம், திருவண்ணாமலை மாவட்டத்தின் மையப் பகுதியில் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ளது. மலை சூழ்ந்த இடம் யாவும், இலை கொண்ட இயக்கத்தின் தாய் வீடாகும், மலை சூழ்ந்த இடம் யாவும், இலை கொண்ட இயக்கத்தின் தாய் வீடாகும். வாஞ்சை கொண்ட நம் தாய்க்கு வரலாற்றுப் புகழ் பாடும் வாகைப் பூக்களை வழங்க இருக்கின்ற பூக்காடுதான் ஏற்காடு. வாஞ்சை கொண்ட நம் தாய்க்கு வரலாற்றுப் புகழ் பாடும் வாகைப் பூக்களை வழங்க இருக்கின்ற பூக்காடுதான் ஏற்காடு. ஆம்! வெற்றித் தேவதையை நம் தாய்க்குத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்ற ஏற்காட்டின் தொடர்ச்சியாம் ஜவ்வாது மலை அடிவாரத்தின் (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கைச் சூழ்நிலை நிறைந்த மிருகண்டா நதி அணைக்கட்டும், செண்பகத் தோப்பு அணைக்கட்டும், செய்யாறு, மிருகண்டா நதி போன்ற ஆறுகளும் உள்ளடங்கிய கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி விவசாயத் தொழில் சார்ந்த தொகுதியாகும்.*

தமிழ்நாட்டில் கிராமப்புற விவசாயிகளின் பொருளாதார நிலைமையைச் சர்க்கரைத் தொழில் மேம்படுத்தி வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 2 இலட்சத்து 75 ஆயிரம்

ஹெக்டேர் பரப்பளவு பயிரிடப்படும் பகுதியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் சற்றே ஏறக்குறைய 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்படுகிறது. இதில் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 22 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்படுகிறது.

எனவே, கழகத்தின் கோட்டையாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் எஃகுக் கோட்டையாகவும் தொடர்ந்து வலம் வந்து கொண்டிருக்கும் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மக்களின், விவசாயிகளின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், தாயுள்ளம் கொண்ட நம் தாயின் நல்லாட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டுறவுத் துறை அல்லது பொதுத் துறை அல்லது தனியார் துறை மூலமாகப் புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஆவன செய்யுமாறு தாயின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கலசப்பாக்கம் தொகுதியில் 50 ஆயிரம் ஏக்கர் கரும்பு சாகுபடி செய்வதாகக் கூறியுள்ளார்கள். ஏற்கெனவே அந்தப் பகுதி 3 சர்க்கரை ஆலைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு சர்க்கரை ஆலைக்கு 15 ஆயிரம் ஏக்கர் தேவை. ஆகையால் 3 சர்க்கரை ஆலைகளுக்கும் 45 ஆயிரம் ஏக்கர் அளவுதான் இருக்கின்றது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல் கரும்பு சாகுபடி அதிகமாக உருவாகின்ற சமயத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்று சொல்லியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தனியார் துறை என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையின் வாயிலாகவோ, பொதுத் துறையின் வாயிலாகவோதான் மாண்புமிகு அம்மாவைப் பொறுத்தவரையில் செய்வார்கள். எந்தச் சூழ்நிலையிலும் தனியார் சர்க்கரை ஆலைக்கு ஆதரவாக இருக்கமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா அரிசி தந்து, வீடுகள்தோறும் மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி தந்து, கல்விக்கு கணினி தந்து, கறவைக்கு மாடு, ஆடு தந்து, பசுமை வீடும் தந்து, பரிவோடு தாலிக்குத் தங்கமும் தந்து, முதியோருக்கு உதவித் தொகை தந்து, இப்படி எல்லோருக்கும் எல்லாமும் அள்ளித் தந்து, ஏங்கி நிற்கும் ஏழைகளை இதய சுத்தியோடு தாங்குகின்ற தமிழகத்தின் தலைமகளே! (மேசையைத் தட்டும் ஒலி)

நாளைய பாரதத்தின் மணிமகுடத்திற்குத் தலைமை ஏற்கவிருக்கும் எங்களின் வெற்றித் தேவதையே! (மேசையைத் தட்டும் ஒலி) ஈரடியில் உலகளந்த இறைவன், ஈரடியில் உலகளந்த இறைவன், ஈரிலையால் தேசம் ஆள ஈன்றிட்ட பேரறிவே! (மேசையைத் தட்டும் ஒலி) ஜாதி சதியும், மத பகைமையும் இல்லா சமத்துவ தேசம் காண, சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியத் தாயே! பாரதம் காத்திட பரிவோடு படைத்திட்ட எங்களின் திருவரங்கத்து கீதையே! தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன் மூலமாக திறமை மற்றும் போட்டியிடும் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் முதலீடுகளை ஈர்ப்பதில் ஆசியாவின் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகத்தைக் கொண்டு வருவதற்காகவும், முதலீடுகளை மேற்கொள்வதற்கு இந்தியாவிலேயே மிகவும் விரும்பப்படும் மாநிலமாகவும் தமிழகத்தைத் தரம் உயர்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த தமிழகத் தொழில் துறையில், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள 28 மாநிலங்களில் முதல் மாநிலமாகத் தரம் உயர்த்தி, சாதனை படைத்த நம் அற்புதத் தலைவியின் நல்லாட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) வல்லரசே நாடி வந்த நம் தாயின் நல்லரசில், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் புதிய சர்க்கரை ஆலை அமைக்க பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ் கூறும் நல்லுலகின் ஒரே ஒப்பற்றத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் நன்றி கூறி அமர்கிறேன்.